


# இயேசுநாதர் பற்றிய நற்செய்தி

திருமறையின் புதிய ஏற்பாட்டிலிருந்து தொகுக்கப்பட்டது

# நூல் அறிமுகம்

**இயேசுநாதர் பற்றிய நற்செய்தி** எனும் இச்சிறிய நூல்

1. இயேசு நாதரை அறிமுகப்படுத்தும் நூல்; அல்லது
2. இயேசு நாதரைப் பற்றிய நற்செய்தியின் ஓர் ஆய்வறிக்கை; அல்லது
3. இயேசு நாதரைப் பற்றிய நற்செய்தி உலகெங்கும் பரப்பிட உதவும் ஓர் கருவி என்றெல்லாம் கூறலாம்.

இது பற்றி மேலும் தெரிந்துகொள்ளவும்

இயேசுவைப் பற்றும் விசுவாசத்தில் வளரவும்

திருமறையை, அல்லது அதன் பிற்பகுதியாம்

புதிய ஏற்பாட்டினை நீங்கள் வாசியுங்கள்.

இயன்றவரை முழுமையாக இயேசுவை அறிந்து

கடவுளின் பெரிதான ஆசீர்வாதங்களைப்

பெற்றுக் கொள்ளும் நோக்குடன் வாசியுங்கள்.

**- லெனார்டு கால்ஸ்டர்**

# THE GOOD NEWS ABOUT JESUS

From the New Testament

Copyright© 1992 by LENARD GALSTER

To my wife Ruth, and son David

Ist printing 1979

*500,000 copies in print in English, French, Chinese, Spanish, Hindi, Arabic, Russian, German, Vietnamese, Korean, Thai, Karen, Samoan, Swahili, Latvian, Lithuanian, Luhyan, Ukrainian, Krahn, Somali, Amharic, Oromo, Urdu, Telugu, Tamil, Malayalam as well as Braille and Large print. Kannada and other languages are in preparation.*

20000 Copies of this Tamil Edition is printed at the Assisi Offset Press, Nagercoil.

2006

Translator : **Helen Wisely**
Cover Design : **Lenard Galster**
Artwork : **Mark Watkins**


*திருவசனப்பகுதிகள்* ***இந்திய வேதாகமச் சங்கத்தின்*** *அனுமதியோடு தமிழ் RV, பதிப்பிருந்து எடுக்கப்பட்டுள்ளது*

# இயேசுநாதர் பற்றிய நற்செய்தி

திருமறையின் புதிய ஏற்பாட்டிலிருந்து
தொகுக்கப்பட்டது.

JESUS
EVANGELISM

# இயேசு நாதர் பற்றிய நற்செய்தி



# இயேசுநாதர் பற்றிய நற்செய்தி

திருமறையின் புதிய ஏற்பாட்டிருந்து தொகுக்கப்பட்டது.

## பொருளடக்கம்


1. இயேசுவில் கடவுள் உலகத்துக்குள் வந்திருக்கிறார் 6
2. இயேசுவின் ஆள்தன்மையைப் பற்றிய சில குறிப்புகள் 8
3. தம் சீடர்களாயிருக்க இயேசு மனிதர்களை அழைக்கின்றார் 13
4. இயேசு தம் மக்களுக்குக் கற்பிக்கின்றார்; அவர்களை ஆசீர்வதிக்கின்றார் 16
5. இயேசு தம்மைப் பின்பற்றுவோரின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றார் 18
6. இயேசு மன்றாட்டுக்களுக்குப் பதிலளிக்கிறார் 20
7. இயேசு பாவத்தை மன்னித்து மக்களின் நோய்களையும் குணமாக்குகிறார். 22
8. இயேசு மக்களை கடவுளிடம் சம்பூரண வாழ்வுக்கு வழி நடத்துகிறார் 25
9. இயேசு உலகுக்கு மீட்பளிக்கிறார் 29
10. இயேசு தம் மக்களுக்கு புது வாழ்வு தருகிறார் 40
11. இயேசு தம் சபையை நிறுவுகிறார் 46
12. இயேசு தம் மக்களை மோட்சத்தில் சேர்த்துக் கொள்கிறார் 51

பாகம் - ஒன்று

# இயேசுவில் கடவுள் உலகத்துக்குள் வந்திருக்கிறார்

## 1. இயேசுவின் மூலமாக கடவுள் மக்களிடம் வருகின்றார்.

தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம். (மாற்கு 1:1)

கடவுளின் சகல பரிபூரணமும் குமாரனாகிய இயேசுவுக்குள்ளே வாசமாயிருக்க வேண்டுமென பிதாவாகிய கடவுள் தாமே பிரியங்கொண்டார். (கொலோசேயர் 1:19,20)

காலம் நிறைவேறின போது கடவுள் தம்முடைய குமாரனை அனுப்பினார். அவர் ஓர் மனிதத்தாயின் மகனாக வந்தார். (கலாத்தியர் 4:5)



**2. "இயேசு" என்ற பெயருக்கு 'பாவத்தினின்று மீட்பவர்' என்பது பொருள்.**

அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் தமது ஜனத்தின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பவர் அவரே. (மத்தேயு 1:21)

**3. மீட்பரும் ஆண்டவருமான இயேசுவின் வருகை மகிழ்ச்சியைக் கொண்டு வருகின்றது.**

தேவதூதன் மேய்ப்பர்களிடம் "பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்குமுரிய பெரிய சந்தோஷத்தை உங்களுக்கு நற்செய்தியாக அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய கிறிஸ்து எனும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்". (லூக்கா 2:10-11)

**4. இயேசு பிறந்து, வாழ்ந்து சுற்றித்திரிந்து திருப்பணி புரிந்த இடங்கள் இன்றும் இருக்கின்றன.**

ஏரோது அரசன் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தார். (மத்தேயு 2:1)

யோவான் சிறையில் வைக்கப்பட்டான் என்று இயேசு கேள்விப்பட்டு, கலிலேயா நாட்டுக்குச் சென்றார். அங்கு, நாசரேத்து நகரில் தங்காமல், செபுலோன், நப்தலி என்னும் நாடுகளின் எல்லைகளிலிருக்கும் கடற்கரைக் கருகான கப்பர்நகூமுக்கு வந்து வாசஞ்செய்தார். (மத்தேயு 4:12-13).

ஊழிய ஆரம்பகாலத்தில் இயேசு ஏறக்குறைய முப்பது வயதுள்ளவராயிருந்தார். (லூக்கா 3:23)

## பாகம் இரண்டு

## இயேசுவின் ஆள்தன்மையைப் பற்றிய சில குறிப்புகள்

### 5. புத்தி கூர்மை மற்றும் உள்ளம் கவரும் பண்புடையவர் இயேசு

அவர் பேசக்கேட்ட யாவரும் அவரது அறிவையும் அவர் பகர்ந்த விடைகளையும் பார்த்து பிரமித்தார்கள். (லூக்கா 2:47)

அவர் வேதபாரகரைப் போல போதியாமல் அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்து வந்தபடியால், அவருடைய போதகத்தைக் குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். (மாற்கு 1:22)

எல்லாரும் அவரை மெச்சி, அவருடைய வாயிலிருந்து வந்த கிருபையுள்ள வார்த்தைகளைக் கேட்டு ஆச்சரியப்பட்டார்கள். (லூக்கா 4:22)



## 6. இயேசு பிரபலமானவர்

கலிலேயாவிலும் தெக்கப்போலியிலும் எருசலேமிலும் யூதேயாவிலும் யோர்தானுக்கு அப்புறத்திலுமிருந்து திரள் திரளாய் ஜனங்கள் வந்து அவருக்குப் பின் சென்றார்கள். (மத்தேயு 4:25)

இயேசு எருசலேமுக்குள் பிரவேசிக்கவே, நகரம் முழுதும் 'இவர் யார்' என்று சொல்லிக் கலங்கினது. (மத்தேயு 21:10)

## 7. எளிமையும் தாழ்மையுமானவர் இயேசு

"நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு நீங்கள் இளைப்பாறுதல் கண்டடைவீர்கள்". (மத்தேயு 11:29)

## 8. இயேசு அன்பு கூருகிறவர்

"பிதா என்னில் அன்பு கூர்ந்தது போல நானும் உங்களில் அன்பு கூர்ந்தேன்; என் அன்பில் நிலைத்திருங்கள்". (யோவான் 15:9)

## 9. மகிழ்ச்சி நிறைந்தவர் இயேசு

அந்நேரமே இயேசு பரிசுத்த ஆவியில் அகமகிழ்ந்தார் (லூக்கா 10:21)

"என் சந்தோஷம் உங்களில் இருக்கும்படிக்கும் உங்கள் சந்தோஷம் நிறைவாகும்படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்". (யோவான் 15:11)

**10. இயேசு தோழமையுடையவர்**

"இனி நான் உங்களை வேலைக்காரரென்று சொல்லுகிறதில்லை, வேலைக்காரனுக்குத் தன் எஜமான் செய்வது தெரியாது. உங்களையோ சிநேகிதர் என்றேன்; என் பிதாவினிடம் நான் கேட்ட யாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன். (யோவான் 15:15)

**11. மக்களுக்காகப் பரிதவிப்பவர் இயேசு**

எருசலேம் நகரத்தை சமீபித்தபோது அந் நகரத்தைப் பார்த்து அதற்காக அழுதார். (லூக்கா 19:41)

"என் ஆத்துமா மரணத்துக்கேதுவான பெருந்துக்கங்கொண்டிருக்கிறது" (மத்தேயு 26:38)

நண்பன் லாசர் மரித்த விபரம் பற்றி பேசிக்கொண்டிருக்கையிலேயே "இயேசு கண்ணீர் விட்டார்". (யோவான் 11:35)

**12. வியாகுலப்படுகின்றவர் இயேசு**

கெத்சேமனே எனும் இடத்துக்கு வந்து சீஷரை நோக்கி, "நான் அங்கே போய் ஜெபித்துவருமளவும்

நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள்''. என்று சொல் பேதுருவையும் செபெதேயுவின் குமாரர் இரு வரையும் கூட்டிக் கொண்டுபோய், துக்கமடையவும் வியாகுலப் படவும் தொடங்கினார்''.
(மத்தேயு 26:36-37)

## 13. நியாயமாய் கோபப்படுகிறவர் இயேசு

அவர்களுடைய (சுயநீதிக்காரராம் பரிசேயர்) இருதய கடினத்தினிமித்தம் இயேசு விசனப்பட்டு, கோபத்துடனே பார்த்தார் (மாற்கு 3:5)

## 14. இயேசு சாந்தமானவர்

அவர் ஓர் ஆட்டைப்போல அடிக்கப் படுவதற்குக் கொண்டு போகப்பட்டார்; மயிர் கத்திரிக் கிறவன் முன் ஓர் ஆட்டுக்குட்டி சத்தமிடாதிருக்கிறது போல, அவர் தமது வாயைத் திறவாதிருந்தார். (அப். நடபடிகள் 8:32)

## 15. பாவமில்லாதவர் இயேசு

"அவர் பாவஞ்செய்யவில்லை, அவர் வாயில் வஞ்சகம் காணப்படவுமில்லை''. (Iபேதுரு 2:22)

## 16. இயேசு மன்னிக்கின்றவர்

அப்பொழுது இயேசு, "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே'' என்றார். (லூக்கா 23:24)

## 17. எல்லாம் வல்லவர் இயேசு

இயேசு கிட்டவந்து, சீடர்களை நோக்கி, "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றார். (மத்தேயு 28:18)

இயேசு கடவுளுடைய மகிமையின் பிரகாசமும், அவர் தத்துவத்தின் சொரூபமுமாய், எல்லாவற்றையும் தமது வல்லமையான வார்த்தையினால் தாங்குகிறவராயிருக் கின்றார். (எபிரேயர் 1:3)

## 18. எல்லா புகழும் உடையவர் இயேசு

சீடர்களுக்கு முன்பாக இயேசு மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப்போல பிரகாசித்தது; அவர் வஸ்திரங்கள் வெளிச்சத்தைப் போல வெண்மையாயின. (மத்தேயு 17:2)

சிங்காசனத்தில் வீற்றிருந்தவர் பார்வைக்கு வச்சிரக் கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார். சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில் இருந்தது; அது பார்வைக்கு மரகதத்துக்கு ஒப்பாயிருந்தது. (தரிசனம் 4:3)

## பாகம் மூன்று

# தம் சீடர்களாயிருக்க இயேசு மனிதர்களை அழைக்கின்றார்

**19. தம்மிடம் வரவும் தம்மோடிருக்கவும் மனிதர்களை அழைக்கும் இயேசு "...எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்." (மத்தேயு 11:28)**

இயேசு கலிலேயாவுக்குப் போக மனமாயிருந்து, பிலிப்புவைக் கண்டு, "நீ என்னைப் பின்பற்றி வா" என்றார். (யோவான் 1:43)

இயேசு அவ்விடம் விட்டு அப்பால் போகையில், ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த



ஒருவனைக் கண்டார். அவன் பேர் மத்தேயு. அவர் அவனிடம், "என்னைப் பின்பற்றி வா" என்றார். மத்தேயு எழுந்து அவரைப் பின்பற்றிப் போனான். (மத்தேயு 9:9)

பொழுது விடிந்த போது, இயேசு தம்முடைய சீஷரை வரவழைத்து, அவர்களில் பன்னிருவரைத் தெரிந்தெடுத்து, அவர்களுக்கு **அப்போஸ்தலர்** என்று பேரிட்டார். அவர்கள்: பேதுரு என்று அவர் பேரிட்ட சீமோன், அவன் சகோதரன் அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பர்த்தொலொமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, செலோத்தே என்ற சீமோன், யாக்கோபின் சகோதரன் யூதா, இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் கரியோத்து என்பவர்களே. (லூக்கா 6:13-16)

"உலகத்துக்கு ஒளி நானே; என்னைப் பின்பற்றுகிறவன் இருளில் நடப்பதேயில்லை, ஜீவ வெளிச்சத்தை அடைந்திருப்பான்" என்றார். (யோவான் 7:12)

இயேசு தம் சீஷரைப் பார்த்து, "ஒருவன் எனக்குப் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன். தன்

ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவனோ அதைக் கண்டடைவான்."
(மத்தேயு 16:24-25)

இயேசு அவர்களைப் பார்த்து, "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர் களாக்குவேன்" என்றார். (மாற்கு 1:17)

"ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய்ச் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்." (மத்தேயு 28:19)

"பரிசுத்த ஆவி உங்கள்மேல் வரும்போதோ நீங்கள் பலமடைந்து, எருசலேமிலும் யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்."
(அப். நடபடிகள் 1:8)

## பாகம் நான்கு

# இயேசு தம் மக்களுக்குக் கற்பிக்கின்றார்; அவர்களை ஆசீர்வதிக்கின்றார்

### 20. இயேசு தம் சீஷர்களுக்குக் கற்பிக்கின்றார்.

இயேசு திரளான ஜனங்களைக் கண்டு மலையின் மேல் ஏறினார்; அவர் உட்கார்ந்த பொழுது, அவருடைய சீஷர் அவரிடம் வந்தார்கள்; அப்பொழுது அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார். (மத்தேயு 5:1-2)

நிக்கொதேமு என்பவன் இராக்காலத்தில் இயேசுவிடம் வந்து, "ரபீ, நீர் கடவுளிடமிருந்து போதகராக வந்திருக்கின்றீரென்பது எங்களுக்குத் தெரியும். கடவுள் தன்னோடிருந்தாலன்றி நீர் செய்கிற



இந்த அடையாளங்களை எவனும் செய்ய முடியாதே" என்றார். (யோவன் 3:2)

## 21. இயேசு தம்மைப் பின்பற்றுவோருக்கு ஆசீர்வாதங்கள் அளிக்கிறார்.

இயேசு சிறுபிள்ளைகளை அணைத்துக் கொண்டு, அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார். (மாற்கு 10:16)

பெத்தானியா வரைக்கும் தம் சீஷர்களை அழைத்துக் கொண்டு போய், தம்முடைய கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார். (லூக்கா 24:50)

"வருந்தியுழைத்துப் பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு நீங்கள் இளைப்பாறுதல் கண்டடைவீர்கள்; என் நுகம் மெதுவு, என் சுமை இலேசு" என்று சொன்னார் (மத்தேயு 11:28-30)

"நானோ அவைகள் ஜீவனைப் பெறவும், அதை மிகவும் அதிகமாய்ப் பெறவுமே வந்தேன்." (யோவான் 10:10)

## பாகம் ஐந்து

# இயேசு தம்மைப் பின்பற்றுவோரின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றார்

### 22. இயேசு தம்மைப் பின்பற்றுவோரின் உடல் சார்ந்த; மற்றும் ஆன்மீக, பொருளாதார தேவைகளை வழங்குகிறார்.

இயேசு அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்து பார்த்து, ஆசீர்வதித்து, அப்பங்களைப் பிட்டு அவர்களுக்குப் பரிமாறும் படி சீடரிடம் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்படியே இரண்டு மீன்களையும் எல்லாருக்கும் பங்கிட்டார். (மாற்கு 6:41).



இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்கள் ஜெபாலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களில் காணப்பட்ட சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிக் குணமாக்கினார். (மத்தேயு 4:23)

"ஜீவாகாரம் நானே, என்னிடத்தில் வருகிறவன் பசியடைவதேயில்லை; என்னில் விசுவாசம் வைக்கிறவன் ஒருகாலும் தாகமடைவதேயில்லை". (யோவன் 6:35)

இயேசு கடவுளுடைய மகிமையின் பிரகாசமும், அவர் தத்துவத்தின் சொரூபமுமாய், எல்லா வற்றையும் தமது வல்லமையான வார்த்தையினால் தாங்குகிறவராயிருக்கின்றார். (எபிரேயர் 1:3)


"என் கடவுள் தம்முடைய மகிமையான ஐசுவரியத்தின் படியே உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் நிறைவாக்குவார்." (பிலிப்பியர் 4:19)

## பாகம் ஆறு

# இயேசு மன்றாட்டுக்களுக்குப் பதிலளிக்கிறார்.

### 23. தம்மிடம் வரும் மக்களது குறைகேட்டு உதவி செய்கின்றார் இயேசு.

தொழுநோயாளி ஒருவன் வந்து இயேசுவைப் பணிந்து, "ஆண்டவனே, உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மாலாகும்" என்று சொல்ல, அவர் தமது கையை நீட்டி அவனைத் தொட்டு; "எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு" என்றார். உடனே நோய் நீங்கி அவன் சுத்தமானான். (மத்தேயு 8:2-3)



இயேசு கப்பற்நாகூமுக்குட் சென்றபோது, நூற்றுக்கதிபதி ஒருவன் அவரிடம் வந்து: "ஆண்டவனே, வீட்டிலே என் வேலைக்காரன் திமிர்வாதமாய்கிடந்து கொடிய வேதனைப்படு கிறான்" என்று அவரை வேண்டிக் கொண்டான். அவர்: "நான் வந்து அவனை சொஸ்தமாக் குவேன்" என்று அவனிடம் சொன்னார். (மத்தேயு 8:5-7)

"ஆண்டவரே, எங்கள் கண்களைத் திறக்க வேண்டும்" என இரண்டு குருடர்கள் வேண்டினர். இயேசு மனமுருகி அவர்கள் கண்களைத் தொட்டார்; உடனே அவர்கள் பார்வையடைந்து அவருக்குப்பின் சென்றார்கள். (மத்தேயு 20:33-34)

காற்றைக் கண்ட போதோ (பேதுரு) பயந்து, அமிழப்போகையில் "ஆண்டவரே என்னை இரட்சியும்" என்று கதறி கூப்பிட்டான். உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து; "அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்" என்றார். (மத்தேயு 14:30-31).

"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்." (மத்தேயு 7:7)

இயேசு அதைக்கேட்டு, "அம்மா, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக் கடவது" என்றார். (மத்தேயு 15:28)

# இயேசு பாவத்தை மன்னித்து மக்களின் நோய்களையும் குணமாக்குகிறார்

## 24. இயேசு பாவத்தை மன்னிக்கிறார்.

திமிர் வாதக்காரனை படுக்கையோடே சுமந்து வந்தவர்களின் விசுவாசத்தை இயேசு கண்டு, "மனுஷனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப் பட்டன" என்றார். இதைக் கேட்ட வேதபாரகரும் பரிசேயரும்; "தேவதூஷணம் பேசுகிற இவன் யார்? கடவுள் ஒருவரேயன்றி, பாவங்களை மன்னிக்க வல்லவர் யார்" என்று சிந்திக்கத் தொடங்கினார்கள். இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களிடம் "உங்கள் இருதயங்களில் நீங்கள் சிந்திக்கிறதென்ன? உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டனவென்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது? என்றாலும், பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷ குமாரனுக்கு அதிகாரம் உன்டென்பதை நீங்கள் அறியவேண்டுமென்று சொல், திமிர்வாதக் காரனைப் பார்த்து: நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன்" என்றார். உடனே அவன் அவர்கள் முன்பாக எழுந்து, தன் படுக்கையை

எடுத்துக் கொண்டு, கடவுளை மகிமைப்படுத்தி, தன் வீட்டுக்குப் போனான். (லூக்கா 5:20-25)

இயேசு அவளிடம், "நானும் உனக்கு ஆக்கினைத் தீர்ப்பிடுகிறதில்லை; நீ போ, இனி பாவஞ்செய்யாதே" என்றார். (யோவான் 8:11)

"பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே," என்றார் (லூக்கா 23:34)

இது நன்மையும் நமது இரட்சகராகிய கடவுள் சந்நிதியில் உகந்ததுமாம். எல்லா மனுஷரும் இரட்சிப்பைப் பெறவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் வேண்டுமென்பதே அவருடைய சித்தம். (I திமோத்தேயு 2:3-4)



உலகத்தை நியாயந்தீர்க்க கடவுள் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், உலகம் அவராலே இரட்சிக்கப்படுவதற்கென்றே அவரை அனுப்பினார். (யோவான் 3:17)

## 25. நோயாளிகளை இயேசு குணமாக்குகிறார்.

இயேசு பேதுருவின் வீட்டுக்கு வந்தபோது அவன் மாமி ஜூரமாய் கிடக்கிறதைக் கண்டார். அவர் அவள் கையைத் தொடவே ஜூரம் அவளை விட்டு நீங்கிற்று; அவள் எழுந்திருந்து அவருக்குப் பணிவிடை செய்தாள். சாயங்காலமானபோது, பேய் பிடித்திருந்த அனேகரை அவரிடம் கொண்டு வந்தார்கள்; வார்த்தையினாலே அவர் ஆவிகளைத் துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் குணமாக்கினார். (மத்தேயு 8:14-16)

இயேசுவின் புகழ் சீரியா எங்கும் பிரபல்ய மாயிற்று. பலவியாதிகளும் வேதனைகளுமுள்ள சகல பிணியாளிகளையும், பேய் பிடித்தவர்களையும், சந்திரரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடம் கொண்டு வந்தார்கள்; அவர்களை அவர் குணமாக்கினார். (மத்தேயு 4:24)

## பாகம் எட்டு

# இயேசு மக்களை கடவுளிடம் சம்பூரண வாழ்வுக்கு வழி நடத்துகிறார்.

**26. நல்ல மேய்ப்பனாகிய இயேசு 'பிதா, குமாரன், பரிசுத்தாவியாம் கடவுளிடம் வழி நடத்துகிறார். ("திரித்துவம்", அதாவது மூன்று ஆள் தன்மைகள் கொண்ட ஒரே கடவுள் 'திரியேகக் கடவுள்' எனப்படுகிறார்).**

"நானே நல்ல மேய்ப்பன். நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்". (யோவான் 10:11)

"வழியும் சத்தியமும் ஜீவனும் நானே; என்னாலே யன்றி ஒருவனும் பிதாவிடம் வரான். என்னை அறிந்து கொண்டீர்களானால், என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இது முதல் நீங்கள் அவரை அறிந்துகொள்ளுகிறவர்களாயிருப்பீர்கள்; அவரைக் கண்டுமிருக்கிறீர்கள்," என்றார். பிலிப்பு அவரிடம்: "ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப்போதும்" என்று சொல்ல, இயேசு: "பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உங்களோடிருந்தும் நீ என்னை அறிந்து கொள்ளவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்," என்றார். (யோவன் 14:6-9)

“நானும் பிதாவும் ஒன்றே” என்றார் இயேசு (யோவான் 10:30)

“நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களோடிருக்கும் படி சத்திய ஆவியானவராகிய வேறொரு சகாயரை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்”.
(யோவான் 14:16-17)

“என் நாமத்தில் பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய சகாயரோ எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப் பூட்டுவார். (யோவான் 14:26)

“ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய்ச் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்; பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திற்குள்ளாக அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசியுங்கள். (மத்தேயு 28:19-20)

“நம்முடைய கடவுளாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்; நீ உன் மழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனத்தோடும் உன் முழுபலத்தோடும் உன் கடவுளாகிய கர்த்தரிடம் அன்புகூர வேண்டும்.... உன்னிடத்தில் நீ அன்பு கூர்வதுபோல உன் அயலானிடத்திலும் அன்பு கூரவேண்டும்”. (மாற்கு 12:29-31)

## 27. தமது வார்த்தை வழியாக மக்களை இயேசு சம்பூரண வாழ்வுக்கு வழிநடத்துகிறார்.

"என் ஆடுகள் என் குரலைக் கேட்கும்; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின் செல்லுகின்றன". (யோவான் 10:27)

கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத் தினால் உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ள வனாக்கக்கூடிய பரிசுத்த ஆகமங்களை நீ சிறுவயது முதல் அறிந்தவன். வேதவாக்கியம் ஒவ்வொன்றும் தேவ ஏவுதலினால் அருளப்பட்டிருக்கிறது.... அது உபதேசிப்பதற்கும் கடிந்து கொள்வதற்கும் சீர்திருத்துவதற்கும் நீதியைக் கற்பிப்பதற்கும் பிரயோஜனமுள்ளது. (II தீமோத்தேயு 3:15-17)



இயேசு தம் சீஷரைப் பார்த்து, "ஒருவன் எனக்குப் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவனோ அதைக் கண்டடைவான்." (மத்தேயு 16:24-25)

"நானோ அவைகள் ஜீவனைப் பெறவும், அதை மிகவும் அதிகமாய்ப் பெறவுமே வந்தேன்". (யோவான் 10:10)

"நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் அழிந்து போவதேயில்லை. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை". (யோவான் 10:28)

"என் சந்தோஷம் உங்களில் இருக்கும் படிக்கும் உங்கள் சந்தோஷம் நிறைவாகும்படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்". (யோவான் 15:11)

## பாகம் ஒன்பது

# இயேசு உலகுக்கு மீட்பளிக்கிறார்

### 28. எல்லோருக்குமாக இயேசு தம் உயிரைக் கொடுத்தார்.

நான் பெற்றுக் கொண்டதும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களினிமித்தம் மரித்தார் என்பதே (I கொரிந்தியர் 15:3)

"ஒருவனும் என் ஜீவனை என்னிடமிருந்து எடுத்துக்கொள்ளான்; நானே அதைக் கொடுக்கிறேன்". (யோவான் 10:18)

அவர்கள் இயேசுவைக் கொண்டுபோனார்கள். அவர் சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு, வெளியே கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் போனார். இதை எபிரேயு பாஷையில் ***கொல்கொதா*** என்று சொல்வார்கள். அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்; அவரோடே வேறு இரண்டு பேரை இருபக்கங்களிலும், இயேசுவையோ மத்தியிலும் அறைந்தார்கள். (யோவான் 19:16-18)

அதன் பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறும்படி, "தாகமாயிருக்கிறேன்" என்றார். காடி நிறைந்த ஒரு பாத்திரம் அங்கே இருந்தது; அவர்கள் கடற்காளானை காடியிலே தோய்த்து, ஈசோப்புத் தண்டில் மாட்டி அவர் வாய்க்கு நீட்டினார்கள். இயேசு காடியை வாங்கின பின்பு, "முடிந்தது" என்று சொல், தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக் கொடுத்தார். (யோவான் 19:28-30)

இயேசு எல்லாருக்காகவும் மரித்தார். (II கொரிந்தியர் 5:15)

நாம் பாவிகளாயிருந்தபோதே கிறிஸ்து நமக்காக மரித்ததினால் கடவுள் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். (ரோமர் 5:8)


உங்கள் முன்னோர்களிருந்து பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தையினின்று, அழிவுள்ளவைகளாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் நீங்கள் மீட்கப்படாமல், மாசில்லாத கறையற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டீர்களென்று உங்களுக்குத் தெரியுமே (I பேதுரு 1:18-19)

"இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29)

## 29. கடவுளில் வைக்கும் நமது விசுவாசத்தின் பொருள் இயேசுவே.

கடவுள் தமது ஒரேபேறான குமாரனில் விசுவாசமாயிருக்கிறவன் எவனும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனைப் பெறும்படி, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் (யோவான் 3;16)

விசுவாச கர்த்தாவும் விசுவாச சம்பூரணரு மாகிய இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடக்கடவோம். (எபிரேயர் 12:1)



## 30. அந்தகாரத்தினின்றும் தண்டனைத் தீர்ப்பினின்றும் இயேசு நம்மை விடுவிக்கின்றார்.

அவரே நம்மை இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்தில் கொண்டுவந்து சேர்த்தார். குமாரனாகிய அவருக்குள் பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. (கொலோசேயர் 1:13-14)

ஆகையால், கிறிஸ்து இயேசுவுக்குள்ளிருக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு என்பதில்லை. (ரோமர் 8:1)

"என் வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பினவரை நம்புகிறவன் நித்திய ஜீவனை உடையவன்; அவன் தீர்ப்புக்காளாகான்; அவன் மரணத்திருந்து ஜீவனுக்குள் வந்தாயிற்று. (யோவான் 5:24)

## 31. இயேசு பாவங்களை மன்னித்து நம்மை பரிசுத்தப் படுத்துகிறார்.

அவர்கள் விசுவாசத்தை இயேசு கண்டு, "மனுஷனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப் பட்டன" என்றார். (லூக்கா 5:20)

இயேசுவும் தமது சொந்த இரத்தத்தினால் ஜனத்தைப் பரிசுத்தஞ் செய்யும்படி நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார் - மரித்தார். (எபிரேயர் 13:12)

தேவகுமாரனாகிய இயேசுவின் இரத்தம் எவ்வித பாவமும் நீங்க நம்மைச் சுத்திகரிக்கிறது. (I யோவான் 1:7)

**32. நாம் குற்றமற்றவர்கள் என இயேசு கூறி அறிவிக்கிறார்!.**

அனேக மீறுதல்களுக்கு வந்த கிருபை வரமோ விடுதலைத் தீர்ப்பு (ரோமர் 5:16)

**33. இயேசுவோடிணைந்த நிலையில் ஆவியின் படி நாம் உயிரோடிருக்கிறோம்.**

கடவுளோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய், நம்மிடத்தில் பாராட்டிய தமது மிகுந்த அன்பி னிமித்தம், மீறுதல்களினால் நாம் மரித்தவர்களா யிருக்கையிலேயே நம்மை கிறிஸ்துவோடுகூட உயிர்ப்பித்தார். (எபேசியர் 2:4-5)

அழிவுள்ள வித்தினால் அல்ல, ஜீவனுள்ளதும் நிலைத்திருக்கிறதுமான தேவவசனமாகிய அழி வில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெனிப்பிக்கப் பட்டிருக்கிறீர்களே. (I பேதுரு 1:23)

நம்முடைய இரட்சகராகிய கடவுளின் தயாளமும் மனுஷர் மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோதோ, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல்,

தமது இரக்கத்தின்படியே மறுஜனன முழுக்கினாலும் பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலினாலும் நம்மை இட்சித்தார். (தீத்து 3:4-5)

**34. இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கின்ற காரணத்தால் நாம் கடவுள் முன் நீதிமான் களாக வைக்கப் பட்டிருக்கின்றோம்.**

மனுமக்களில் எவனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே கடவுளுக்கு முன்பாக நீதிமானாகத் தீர்க்கப்படுவதில்லை. நியாயப் பிரமாணத்தினால் உண்டாவது பாவத்தை அறிகிற அறிவு. இப்பொழுதோ நியாயப்பிரமாணமில்லாமலே கடவுளின் நீதி வெளியாக்கப் பட்டிருக்கிறது; அதைக் குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கத் தரிசனங்களும் சாட்சியிடுகின்றன. அது இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே, விசுவாசமா யிருக்கிற எவருக்கும் பலிக்கும் தேவ நீதியே. வித்தியாசமே இல்லை. எல்லாரும் பாவஞ் செய்து அதன் விளைவாக தேவமகிமையை இழந்திருக்கிறார்கள். அவர் கிருபையினாலேயே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு இலவசமாய் நீதிமான்களாகத் தீர்க்கப்படுகிறார்கள். (ரோமர் 3:20-24)

கிரியை செய்யாமல், அவபக்தனை நீதிமானாகத் தீர்க்கிறவரிடம் விசுவாசம் வைக்கிறவனுக்கோ அவன் விசுவாசமே நீதியாக எண்ணப்படும். (ரோமர் 4:5)

நாம் அவருக்குள் கடவுளின் நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத இயேசுவை நமக்காகப் பாவம் ஆக்கினார். (II கொரிந்தியர் 5:21)

## 35. இயேசு நம்மை கடவுளின் கோபத்திலிருந்து மீட்டு நம்மோடு சமாதானம் செய்து கொள்கிறார்.

நாம் இயேசுவின் இரத்தத்தினாலே இப்பொழுது நீதிமான்களாகத் தீர்க்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவரால் நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. (ரோமர் 5:9)

விசுவாசத்தினாலே நீதிமான்களாகத் தீர்க்கப் பட்ட நாம் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்க் கடவுளோடு சமாதான முடையவர்களாய் நிலைத்திருப்போமோக. (ரோமர் 5:1)

## 36. பிசாசையும் மரணத்தின் வல்லமையையும் இயேசு வென்றார்.

பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, இயேசுவும் அவர்களைப் போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர் ஆனார்; மரணத்தின் வல்லமையையுடைய பிசாசானவனைத் தமது மரணத்தினால் அழிக்கும் படிக்கும், மரணபயத்தினால் ஜீவகாலமெல்லாம் அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை செய்யும் படிக்கும் அப்படியானார். (எபிரேயர் 2:14-15)

## 37. இயேசு நம்மைத் தமது நண்பர்களாக்கினார்

நாம் சத்துருக்களாயிருந்த போது கடவுள் தமது குமாரனின் மரணத்தினாலே நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கி நண்பர்களாக்கிக் கொண்டார். (ரோமர் 5:10).

இப்பொழுதோ, இயேசு அடைந்த மரணத்தின் மூலமாய் அவருடைய மாம்ச சரீரத்தில் கடவுள் உங்களை ஒப்புரவாக்கிக் கொண்டார்; உங்களைப் பரிசுத்தராகவும் மாசற்றவர்களாகவும் குற்றஞ்சாட்டப் படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தவேண்டு மென்றே அப்படிச் செய்தார். (கொலோசேயர் 1:22)

## 38. நாம் அவருக்குச் சொந்தமானவர்களா யிருக்க இயேசு நம்மைத் தெரிந்தெடுக்கிறார்.

"நீங்கள் என்னைத் தெரிந்தெடுக்கவில்லை, நான் உங்களைத் தெரிந்தெடுத்தேன்."
(யோவான் 15:16)

நீங்களோ, அந்தகாரத்தினின்று தமது ஆச்சரிய மான ஒளியினிடத்திற்கு உங்களை வரவழைத்த வரின் குணாதிசயங்களை அறிவிக்கும்படி, தெரிந்தெடுக்கப்பட்ட சந்ததியும் ராஜரீக ஆசாரியக் கூட்டமும் பரிசுத்த ஜாதியும் அவருக்குச் சொந்தமான ஜனமுமாயிருக்கிறீர்கள். (I பேதுரு 2:9)

"நீங்கள் கிரையத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள், மனுஷருக்கு அடிமைகளாக வேண்டாம்." (1கொரிந்தியர் 7:23)

## 39. இயேசு நம்மை நேசிக்கிறார்

ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் பெரிதான அன்பு யாரிடத்திலு மில்லை. (யோவான் 15:13)

"பிதா என்னில் அன்பு கூர்ந்தது போல நானும் உங்களில் அன்பு கூர்ந்தேன்." (யோவான் 15:9)

## 40. இயேசு நம்மை குணமாக்குகிறார்.

இயேசுவின் தழும்புகளால் குணமாக்கப் பட்டீர்கள். (I பேதுரு 2:24)

## 41. இயேசு நமக்கு மகிழ்ச்சியளிக்கின்றார்.

"என் சந்தோஷம் உங்களில் இருக்கும்படிக்கும் உங்கள் சந்தோஷம் நிறைவாகும் படிக்கும் இவை களை உங்களுக்குச் சொன்னேன்" (யோவான் 15:11)

"எவர்கள் அக்கிரமங்கள் மன்னிக்கப் பட்டனவோ, எவர்கள் பாவங்கள் மூடப்பட்டனவோ, அவர்கள் பாக்கியவான்கள்," (ரோமர் 4:7)

ஜனங்களெல்லாரும் இயேசு செய்த சகல மகிமையான செய்கைகளையும் பற்றி சந்தோஷித் தார்கள். (லூக்கா 13:17)

"உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதைப் பற்றி சந்தோஷப்படுங்கள் என்றார்" (லூக்கா 10:20)

## 42. மோட்சத்தில் நமக்கோர் இடத்தை ஆயத்தம் செய்கிறார் இயேசு.

"என் பிதாவின் வீட்டில் அனேக வாசஸ்தலங்கள் உண்டு... ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன்." (யோவான் 14:2)

## 43. இயேசு தம் மக்களுக்கு நிலையான மெய்வாழ்வு தருகின்றார்.

பாவத்தின் சம்பளம் மரணம், கடவுளின் கிருபை வரமோ நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் நித்திய ஜீவன். (ரோமர் 6:23)

நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் அழிந்து போவதேயில்லை; ஒருவனும் அவைகளை என் கையிருந்து பறித்துக் கொள்வதுமில்லை. (யோவான் 10:28)

இயேசு மார்த்தாளிடம், "உயிர்த்தெழுதலும் ஜீவனும் நானே; என்னில் விசுவாசம் வைக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னில் விசுவாசம் வைக்கிறவன் எவனும் என்றென்றைக்கும் மரிப்பதேயில்லை. இதை நம்புகிறாயா" என்றார். (யோவான் 11:25-26)

"இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிருப்பாய்" என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் (லூக்கா 23:43)

## 44. இயேசு உலகுக்கு மீட்பு அளிக்கிறார்.

கடவுள் தம்முடைய ஒரேபேறான குமாரனில் விசுவாசமாயிருக்கிறவன் எவனும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனைப் பெறும்படி, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். (யோவான் 3:16)

"வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிப்பைப் பெறுவதற்கு வானத்தின் கீழ் மனுஷருக்குள் அருளப்பட்ட வேறொரு நாமமு மில்லை" என்று சொன்னான். (அப். நடபடிகள் 4:12)

இயேசு சகேயுவை நோக்கி; "இந்த வீட்டுக்கு இன்று இரட்சிப்பு வந்தது" என்றார். (லூக்கா 19:9)

## பாகம் பத்து

# இயேசு தம் மக்களுக்கு புது வாழ்வு தருகிறார்

## 45. மரித்து உயிர்த்தெழுந்த இயேசு தம்மைப் பின்பற்றுவோருக்கு தரிசனமளிக்கின்றார்.

இயேசு மகதலேனா மரியாளைப் பார்த்து, "அம்மா ஏன் அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?" என்றார். அவள், அவரைத் தோட்டக்காரரென்று நினைத்து: "ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக் கொள்ளுவேன்" என்றாள். இயேசு அவளை நோக்கி: "மரியளே" என்றார். அவள் திரும்பிப் பார்த்து,



எபிரேயு பாஷையில், "ரபூனி" என்றாள்; அதற்கு "குருவே" என்று அர்த்தமாம். (யோவான் 20:15-16)

இயேசு இங்கே (கல்லறையில்) இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்; சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று அவருடைய சீஷருக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்கு முன் கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்; உங்களுக்குச் சொல்லிவிட்டேன் என்றான். அவர்கள் சீக்கிரமாய்க் கல்லறையை விட்டு, பயத்தோடும் மகா சந்தோஷத்தோடும் அவருடைய சீஷருக்கு அறிவிக்க ஓடினார்கள். ஓடவே, இயேசு தாமே அவர்களுக்கு எதிர்பட்டு; "வாழ்க" என்றார். அவர்கள் கிட்ட வந்து அவர் பாதங்களைத் தழுவி அவரைப் பணிந்து கொண்டார்கள். (மத்தேயு 28:6-9)

இயேசு பாடுபட்ட பின்பு, நாற்பது நாளாய் அவர்களுக்குத் தரிசனமாகி, கடவுள் இராஜ்யத்துக் குரியவற்றை உபதேசித்து, பல தெளிவான அடையாளங்களினால் தம்மை உயிருள்ளவராக அவர்களுக்குக் காண்பித்தார். (அப். நடபடிகள் 1:3)

நான் பெற்றுக் கொண்டதும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களினிமித்தம் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு,

வேத வாக்கியங்களின் படி மூன்றாம் நாள் உயிரோடெழுப்பப்பட்டார். கேபாவுக்கும் பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன் பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில், தரிசனமானார். (Iகொரிந்தியர் 15:3-6)

"எல்லோருக்கும் கடைசியில், அகாலப் பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்" (1கொரிந்தியர் 15:8)

**46. இயேசுவின் உயிர்த்தெழுதல் அவரது மக்களுக்குப் புது வாழ்வினைக் கொண்டு வருகிறது.**

"நான் வாழ்கிறேன்; நீங்களும் வாழ்வீர்கள்". (யோவான் 14:19)

தம்முடைய ஒரே பேறான குமாரனால் நாம் பிழைக்கும்படி கடவுள் அவரை இவ்வுலகத்துக்கு அனுப்பினதினால் கடவுளின் அன்பு நம்மிடத்தில் வெளிப்பட்டது. கடவுளினிடம் நாம் அன்பு கூர்ந்ததனாலல்ல, நம்மிடம் அவர் அன்பு கூர்ந்து, நமது பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலேயே அன்பு விளங்குகிறது. பிரியமானவர்களே, கடவுள் இவ்விதமாய் நம்மில் அன்பு கூர்ந்திருக்க, நாமும் ஒருவரிலொருவர் அன்புகூரக் கடமைப் பட்டிருக்கிறோம். (I யோவான் 4:9-11)

“பிழைத்திருக்கிறது இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் . பிழைத்திருக்கிறார்”. (கலாத்தியர் 2:20)

பாவத்தின் சம்பளம் மரணம், கடவுளின் கிருபை வரமோ நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் நித்திய ஜீவன். (ரோமர் 6:23)

எந்த சிருஷ்டியானாலும், நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள கடவுளின் அன்பை விட்டு நம்மைப் பிரிக்க முடியாதென்று நிச்சயித்திருக்கிறேன். (ரோமர் 8:39)

நம்மில் அன்பு கூருகிறவராலே இவைகளெல்லா வற்றிலேயும் நாம் முற்றும் ஜெயம் கொள்ளுகிறவர் களாகவே இருக்கிறோம். (ரோமர் 8:37)

இப்படியிருக்க, இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? கடவுள் நமது பட்சத்தி ருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்த குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர் அவரோடுகூட எல்லாவற்றையும் நமக்கு அருளா திருப்பது எப்படி? (ரோமர் 8:31-32)

ஆகையால், கிறிஸ்து இயேசுவுக்குள்ளிருக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு என்பதில்லை. (ரோமர் 8:1)

பிழைத்திருக்கிறவர்கள் இனி தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்றே பிழைத்திருக்கும்படி இயேசு எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம் (II கொரிந்தியர் 5:15)

"என் பிதாவின் வீட்டில் அனேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்யிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேனே. நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுவேனே யாகில், நானிருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடம் சேர்த்துக் கொள்ளுவேன்". (யோவான் 14:2-3)

"இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார் (லூக்கா 23:43)

நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கடவுளும் பிதாவுமானவர் ஸ்தோத்திரத்துக்குரியவர். இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே ஜீவனுள்ள நன்னம்பிக்கையுண்டாகும்படி அவர் தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெனிப்பித்தார். அழியாததும் மாசற்றதும் வாடாததுமான சுதந்தரம் நமக்குக் கிடைப்பதற்கென்றே இப்படிச் செய்தார். (Iபேதுரு 1:3-4).

அவரைக் காணாமலே அவரில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலே அவரில் விசுவாசம் வைத்து, சொல்லிமுடியாததும் மகிமை நிறைந்ததுமான சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து, உங்கள் விசுவாசத்தின் இலக்காகிய ஆத்தும இரட்சிப்பை அடைகிறீர்கள். (Iபேதுரு 1:8-9)

## பாகம் பதினொன்று

## இயேசு தமது சபையை நிறுவுகிறார்

**47. இயேசு தமது சபையைக் கட்டுகிறார்**

"... என் சபையைக் கட்டுவேன்". (மத்தேயு 16:18)

**48. தம்மை வெளிப்படுத்த இயேசு திருவசனத்தைப் பயன்படுத்துகிறார்.**

எல்லா ஆகமங்களிலும் தம்மைப் பற்றி எழுதியிருந்தவைகளை இயேசு அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார். (லூக்கா 24:27)

**49. தமது வார்த்தையின் மூலமாக, தம்மைப் பற்றும் விசுவாசத்துக்குள் கடவுள் தம் மக்களைக் கொண்டு வருகிறார்.**

இயேசு தேவகுமாரனாகிய **கிறிஸ்து** என்று நீங்கள் நம்புவதற்கும், நம்பி அவர் நாமத்தில் ஜீவனை அடைவதற்கும் இவைகள் எழுதப்பட்டிருக்கின்றன. (யோவான் 20:31)

"ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமோ ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொன்ன வசனங்கள் ஆவியும் ஜீவனுமாம்". (யோவான் 6:63)

"சுவிசேஷத்தைப் பற்றி நான் வெட்கப்படேன். விசுவாசிக்கிறவன் எவனுக்கும்.... அது இரட்சிப்புக் கேதுவான தேவவல்லமை". (ரோமர் 1:16)



**50. தம் மக்களை வலிமையுடையவர்களாக்க பரிசுத்த ஆவியானவரை இயேசு அனுப்புகிறார்.**

"பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிற சகாயர், அதாவது பிதாவினிடத்தி லிருந்து புறப்பட்டு வருகிற சத்திய ஆவியானவர் வரும்போது, அவர் என்னைக் குறித்து சாட்சி பகர்வார். நீங்களும் முதலிலிருந்தே என்னோடிருக் கிறபடியால் சாட்சி பகர்வீர்கள்" (யோவான் 15:26-27)

"பரிசுத்த ஆவி உங்கள் மேல் வரும்போதோ நீங்கள் பலமடைந்து, எருசலேமிலும் யூதேயா முழுவதிலும் சாமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்", என்றார். (அப். நடபடிகள் 1:8)

**51. இயேசுவின் சாட்சிகளாயிருப்போர் அவரைப் பற்றிய நற்செய்தி எங்கும் பரவிட உதவியா யிருக்கின்றனர்.**

பிலிப்பு இயேசுவைப்பற்றிய நற்செய்தியை எத்தியோப்பிய அண்ணகனுக்குப் பிரசங்கித்தான். (அப். நடபடிகள் 8:35)

அப்போஸ்தலர்கள் தேவாலயத்திலும் வீடு களிலும் நாள்தோறும் இடைவிடாமல் உபதேசம்

செய்து, 'இயேசுவே கிறிஸ்து' என்ற நற்செய்தியைப் பிரசங்கித்து வந்தார்கள். (அப். நடபடிகள் 5:42)

இயேசுவினுடைய பிரஸ்தாபம் கலேயாவின் சுற்றுப்புறமெங்கும் பரவிற்று. (மாற்கு 1:28)

"ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய்ச் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்". (மத்தேயு 28:19)

**52. இயேசுவின் சபை வளருகின்றது.**

கடவுளின் வசனம் விருத்தியடைந்தது; சீஷர் தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று. (அப். நடபடிகள் 6:7)

இரட்சிக்கப்படுகிறவர்களை ஆண்டவர் அனுதினமும் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டு வந்தார். (அப். நடபடிகள் 2:47)

இயேசுவே சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் தந்தருளினார்.. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை ஊன்றக் கட்டுவதற்காக, திருப்பணி விடை வேலைக்கென்று பரிசுத்தவான் களைப் பக்குவப்படுத்தும் பொருட்டு இவர்களைத் தந்தருளினார். (எபேசியர் 4:11-13)

**53. விசுவாசிக்கின்றவர்கள் 'கிறிஸ்தவர்கள்' என அழைக்கப்படுகின்றார்கள்.**

சீஷர்களுக்குக் 'கிறிஸ்தவர்கள்' என்கிற பெயர் முதல் முறையாக அந்தியோகியாவிலே வழங்கலாயிற்று. (அப். நடபடிகள் 11:26)

**54. கிறிஸ்தவர்கள் இயேசுவை மேன்மேலும் அதிகமாக அறிந்து வருகிறார்கள்.**

நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் (II பேதுரு 3:18).

பாகம் பன்னிரண்டு

## இயேசு தம் மக்களை மோட்சத்தில் சேர்த்துக் கொள்கிறார்.

### 55. மோட்ச மகிமைக்குள்ளும் வல்லமைக்குள்ளும் இயேசு ஏறிச்சென்றார்.


பின்பு சீஷர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், இயேசு உயர எடுத்துக் கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. (அப். நடபடிகள் 1:9)

சிங்காசனத்தில் வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார். சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில் இருந்தது; அது பார்வைக்கு மரகதத்துக்கு ஒப்பாயிருந்தது. (தரிசனம் 4:3)

இயேசு சீஷரை நோக்கி, "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றார். (மத்தேயு 28:18)

### 56. இயேசு திரும்பவும் காட்சியளிப்பார்

"உங்களிடத்திலிருந்து வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசு எவ்விதமாக வானத்துக்குள் போகக்கண்டீர்களோ அவ்விதமாகவே மீண்டும் வருவார்" என்றார்கள். (அப். நடபடிகள் 1:11)



இதோ, மேகங்களோடு வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும். (தரிசனம் 1:7)

மின்னல் கிழக்கில் தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறது போல மனுஷகுமாரன் வருகையும் இருக்கும். (மத்தேயு 24:27)

ஏற்ற காலங்களில் கடவுள் அந்த பிரசன்னத்தை வெளியாக்குவார். அவரே நித்தியானந்த முள்ள ஏகசக்கராதிபதி, ராஜாதிராஜா, கர்த்தாதி கர்த்தா. (1தீமோத்தேயு 6:15).

"இதோ! நான் விரைவில் வருகிறேன்" என்றார் இயேசு. (தரிசனம் 22:7)

## 57. தமது வருகையின் போது இயேசு மரித்தோரை உயிர்த்தெழச் செய்வார்.

"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்கு சொல்லுகிறன், காலம் வருகிறது, வந்துமாயிற்று. அப்பொழுது மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்பார்கள், கேட்டவர்கள் பிழைப்பார்கள். (யோவான் 5:25)

## 58. இயேசு, தம் மக்கள் மகிமை அடையச் செய்வார்

ஒரு இரசகசியத்தை உங்களுக்குச் சொல்லு கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஒரு நிமிஷத்திலே, இமைப்பொழுதிலே, கடைசி எக்காளம் தொனிக்கும் போது நாமெல்லாரும் மறுரூப

மடைவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுப்பப்படு வார்கள்; நாமும் மறுரூபமடைவோம். அழிவுக் குரியதாகிய இது அழிவின்மையையும், சாவுக்குரிய தாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ள வேண்டும். (Iகொரிந்தியர் 15:51-53)

விண்ணகமே நமது தாய்நாடு. அங்கிருந்து மீட்பர் ஆண்டவர் இயேசு வருவாரெனக் காத்திருக்கிறோம். அவர், நமது தாழ்வான சரீரத்தைத் தமது மகிமையான சரீரத்துக்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார். (பிலிப்பியர் 3:20-21)

பிரியமானவர்களே, இப்பொழுது கடவுளின் பிள்ளைகளாயிருக்கிறோம், இனிமேல் என்னமா யிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; அவர் வெளிப்படும்போது, அவர் இருக்கிறபடியே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவரைப் போலவே இருப்போமென்று நமக்குத் தெரியும். (Iயோவான் 3:2)

### 59. இயேசுவின் வருகையில் இந்நிகழ்கால உலகம் அழிக்கப்படும்; கடவுள் யாவையும் புதிதாக்குவார்.

ஆண்டவரின் நாள் திருடன் வருகிற விதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமடவென்று அகன்றுபோம், பூதியங்கள் வெந்துருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் வெளியாகும். (IIபேதுரு 3:10)

அவருடைய வாக்குத்தத்தத்தின் படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகக் காத்திருக்கிறோம். (IIபேதுரு 3:13)

சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவர்: "இதோ, நான் எல்லாவற்றையும் புதிதாக்குகிறேன்" என்றார். (தரிசனம் 21:5)

## 60. இயேசு மோட்சத்தில் தம்மக்களுக்காக ஓர் இடத்தை ஆயத்தம் செய்கிறார்.

"என் பிதாவின் வீட்டில் அனேக வாசஸ் தலங்கள் உண்டு;...... ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ண போகிறேனே". (யோவான் 14:2)

பின்பு, புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன். முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின, சமுத்திரமும் இல்லாமற் போயிற்று. புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரம் கடவுளிடத்தி னின்று வானத்திருந்து இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல் ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. மேலும், சிங்காசனத்திருந்து பெருஞ்சத்தம் உண்டாகக் கேட்டேன். "இதோ, கடவுளின் கூடாரம் மனுஷரிடத்திருக்கிறது; அவர்களிடத்தில் அவர் தங்குவார், அவர்கள் அவர் ஜனங்களா யிருப்பார்கள், கடவுள் தாமே அவர்களோடிருப்பார். அவர்கள் கண்களினின்று கண்ணீர் யாவையும்

துடைப்பார். இனி மரணமும் இல்லை, துக்கமும் இல்லை, அலறுதலும் இல்லை, வேதனையும் இல்லை; முந்தினவைகள் ஒழிந்து போயின" என்று அது விளம்பினது. (தரிசனம் 21:1-4)

ஏழுதூதரில் ஒருவன் எருசலேமாகிய பரிசுத்த நகரம் வானத்திருந்து கடவுளிடத்தினின்று இறங்கி வருகிறதை எனக்குக் காண்பித்தான். அது கடவுளின் மகிமை பொருந்தியது; அதன் தேஜஸ் விலையுயர்ந்த இரத்தினத்திற்கும், பளிங்குபோல் ஒளி வீசும் வச்சிரக்கல்லுக்கும் ஒப்பாயிருந்தது. (தரிசனம் 21:10-11)

நகரத்தின் வீதி தெளிவான கண்ணாடி போன்ற பசும்பொன். (தரிசனம் 21:21)

தேவாலயத்தை நான் அதிலே காணவில்லை; சர்வவல்ல கடவுளாகிய கர்த்தரும் ஆட்டுக் குட்டியானவருமே அதற்கு ஆலயம். நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும் சந்திரனும் வேண்டுவதில்லை; கடவுளின் மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது. ஆட்டுக் குட்டியானவரே அதற்கு விளக்கு. (தரிசனம் 21:22-23)

பின்பு, பளிங்கு போல் தெளிவான ஜீவ தண்ணீருள்ள நதி கடவுளும் ஆட்டுக் குட்டியான வரும் இருக்கிற சிங்காசனத்திருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான், நகர வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும் பன்னிரண்டு வித கனிகளைத் தரும் ஜீவ விருட்சம் இருந்தது. (தரிசனம் 22:1-2)

## 61. இயேசு தாமே தம் மக்களை மோட்சத்துக்கு அழைத்துச் செல்வார்.

"நானிருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடம் சேர்த்துக் கொள்ளுவேன்" (யோவான் 14:3)

"அன்றியும், மனுஷகுமாரன் தமது மகிமையில் சகல தூதரோடும் வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜாதியாரும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப் படுவார்கள்; மேய்ப்பன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடு களைத் தமது வலது பக்கத்திலும் வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார். அப்பொழுது ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து, "வாருங்கள் என் பிதாவினுடையவர்களாய் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகத்தோற்றம் முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" என்பார். (மத்தேயு 25:31-34)

"இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர், "சாபத்துக்குட்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்கும் அவன் தூதருக்கும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினிக்குள் போங்கள்" என்பார். (மத்தேயு 25:41)

அப்படியே இவர்கள் நித்திய ஆக்கினைக்குள் போவார்கள்; நீதிமான்களோ நித்திய ஜீவனுக்குள் போவார்கள் என்றார். (மத்தேயு 25:46)

"இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார். (லூக்கா 23:43)

ஒருவனும் எண்ணமுடியாத திரளான ஜனக் கூட்டம் காணப்பட்டது. இவர்கள் சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைகளிலுமிருந்து வந்தவர்கள். இவர்கள் வெள்ளை அங்கிகளைத் தரித்துக் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக் குட்டியானவருக்கு முன்பாகவும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் மகா சத்தமிட்டு: "சிங்காசனத்தில் வீற்றிருக்கிற நம்முடைய கடவுளுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஜெயமங்களம்" என்று ஆர்ப்பரித்தார்கள். ஆர்ப்பரிக்கவே, தூதர் யாவரும் சிங்கா சனத்தையும் மூப்பர்களையும், நான்கு ஜீவன்களையும் சூழ்ந்து நின்று, சிங்காசனத்தின் முன் சாஷ்டாங்கமாய் விழுந்து, கடவுளைத் தொழுது கொண்டு "ஆமேன், துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பலமும் எங்கள் கடவுளுக்கு என்றென்றைக்கும் இருப்பதாக, ஆமேன்" என்றார்கள். (தரிசனம் 7:9-12)

## 62. முடிவுரை

எனக்கு பிழைத்திருப்பது கிறிஸ்து, சாவது ஆதாயம், ஆயினும் நான் சரீரத்தில் பிழைத்திருப்பதால் என் வேலைக்குப் பலன் கிடைக்குமேயானால், நான் தெரிந்து கொள்ள வேண்டியது இன்னதென்று நான் சொல்ல முடியாது.

இருபக்கங்களிலும் நான் நெருக்கப்படுகிறேன். தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவோடிருக்க எனக்கு ஆசையுண்டு, அது மிகவும் அதிக நலமாயிருக்கும். அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்கள் நிமித்தம் அதிக அவசியம். (பிப்பியர் 1:21-24)

"எருசலேமிலும் யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்றார். (அப். நடபடிகள் 1:8)

ஆண்டவரின் ஊழியத்தில் எப்பொழுதும் பெருகி, உறுதியுள்ளவர்களும் அசையாதவர் களுமாய் நிலைத்திருங்கள். (Iகொரிந்தியர் 15:58)

விசுவாச கர்த்தாவும் விசுவாச சம்பூரணரு மாகிய இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடக்கடவோம். (எபிரேயர் 12:1)

இடறி விழாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சன்னிதானத்தில் உங்களை மாசற்றவர்களாய் மகிழ்ச்சியோடே நிறுத்தவும் வல்லமையுள்ளவருக்கு, ஒரே கடவுளும் நம்முடைய இரட்சகருமாகிய அவருக்கே, யுகாரம்பத்தின் முன்னும் இப்பொழுதும் எப்பொழுதுமான சதாகாலங்களிலும் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் மகிமையும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இருப்பதாக. ஆமேன் (யூதா 1:24-25)

